


# ஜீலை 5 - புனித அந்தோனி மரி சக்கரியா (1502 – 1539)

இளம் வயதிலேயே இவர் பக்தி உள்ளவராயிருந்தார். படிப்பிலும் சிறந்து விளங்கினார். வைத்திய நிபுணர் பட்டம் பெற்றார். உடல் நோய்களைக் குணமாக்கி வந்த இவர் ஆன்ம நோய்களைக் குணமாக்குவதே உயர்ந்தது என உணர்ந்தார். உலக ஆசைகளை துறந்து குருப்பட்டம் பெற்று குருக்களுக்கென ஒரு சபையை ஏற்படுத்தினார். அச்சபையினருக்கு அப்போஸ்தலரான புனித சின்னப்பரே மேல்வரிச்சட்டம், திவ்விய நற்கருணையை சூழ்ந்து நின்று இயேசுவை ஆராதிக்கும் வானதூதர்களான அருபிகளுடன் சேர்ந்து இவரும் ஆராதிப்பார். உள்ளத்தையும், உடலையும் தூய்மையாய் வைத்திருப்பதற்கான வலிமையை திவ்விய நற்கருணையிலிருந்து இவர் பெற்றார். திருச்சபையின் எதிரிகளையும் தனது ஆன்மாவின் எதிரிகளையும் தோற்கடிப்பதற்கான தைரியத்தை திவ்விய நன்மை இவருக்குக் கொடுத்து வந்தது. இவர் தமது மறை உரைகளால் அநேகரை மனந்திருப்பினார். "மக்களை மனந்திருப்பியது எனது வாய்ச்சாதகத்தினால் அல்ல. இறைவனின் அருளும் பரிசுத்த ஆவியின் வல்லமையுமே காரணம்" என்பார்.

**சிந்தனை:**

திவ்விய நன்மை வாங்கிய பின் இயேசுவுடன் பேசி பாவத்தை விலக்குவதற்கான வலிமையை பெற்றுக் கொள்வோம்.

**செபம்:**

திவ்விய நற்கருணையில் இருக்கிற இயேசுவே, பாவத்தை விலக்க எனக்குத் துணைபுரியும்.